**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**MCOP.No: 284/2022** **நாள் 07.08.2026**

**ம.சா.2, திரு.பாண்டிக்குமார்**

**மா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

விபத்தானது இரவு சுமார் 11.30 மணியளவில் நடந்தது. விபத்து நடந்த சாலையானது கிராமத்துக்கு செல்லக்கூடிய சாலை என்றும் அது குறுகிய அளவில் உள்ள சாலை என்றால் சரிதான். அந்த சாலையில் வாகன போக்குவரத்து குறைவாக தான் இருக்கும் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன வைரமுத்து என்பவர் விபத்து சமயத்தில் இருசக்கர வாகனமான பஜாஜ் பல்சரை அவர் தான் ஓட்டிச்சென்றார் என்றால் சரிதான். அவருக்கு அப்போது வயது 21 என்றும் அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னல் அது சரிதான். விபத்து சம்மந்தமாக நத்தம்பட்டி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை மேற்படி வைரமுத்துக்கு எதிராக தான் பதிவாகி உள்ளது என்றால் சரிதான். அந்த சாலையில் அதிக போக்குவரத்து இல்லை என்பதால் விபத்தில் இறந்துபோன வைரமுத்து என்பவர் தன்னுடைய இருசக்கர வாகனத்தை அதிக வேகமாக ஓட்டிச்சென்று புளியமரத்தின்மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் அவர் மித வேகத்தில் தான் சென்றார். நத்தம்பட்டி போலிசார் விபத்தில் இறந்துபோனவர் தான் இருசக்கர வாகனத்தை அதிக வேகமாக ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டதாக முதல் தகவல் அறிக்கை பதிவாகி உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்பொழுது அவர் தலைக்கவசம் அணியாமல் தான் இருசக்கர வாகனத்தில் சென்றார் என்றால் சரிதான். தலைக்கவசம் அணியாமல் இருசக்கர வாகனம் ஓட்டுவது மோட்டார் வாகன விதிமுறைகளுக்கு முரணானது என்றால் சரிதான். தலைக்கவசம் அணிந்திருந்தால் இந்த விபத்தில் இறந்திருக்க வாய்ப்பில்லை என்றால் அப்படியில்லை. விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. இந்த விபத்தானது வைரமுத்துவின் அதிவேகம் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றால் அது சரியல்ல. விபத்தை நான் இரவு சுமார் 11.30 மணியளவில் பார்த்திருந்தால் நானே காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றும் விபத்தை நான் பார்க்காததால் புகார் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் அப்படியில்லை. வைரமுத்துவும் நானும் ஒரே

ஊரை சேர்ந்தவர்கள் தான். விபத்தில் இறந்துபோனவரும் நானும் ஒரே ஊரை சார்ந்தவர் என்பதாலும் அவரது குடும்பத்திற்கு அதிக இழப்பீடை வாங்கி தரவேண்டும் என்பதற்காக வேண்டி வைரமுத்து அதிவேகமாக ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 07thday of August 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.